# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 | இதழ் 5 | 6 பெப்ரவரி 1970 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


### மாசேதுங் சிந்தனை

வர்க்க சமுதாயத்தில், புரட்சிகளும் புரட்சி யுத்தங்களும் தவிர்க்க முடியாதவை. அவை இல்லாவிட்டால், சமுதாய வளர்ச்சியின் எந்த ஒரு பாய்ச்சலையும் நிறைவேற்ற முடியாது; பிற்போக்கு ஆளும் வர்க்கங்களை தூக்கியெறிவது சாத்தியமாகாது; எனவே, மக்கள் அரசியல் அதிகாரத்தை பெறுவது அசாத்தியம்

# 22 வருடங்களாகியும் கண்ட பலன் என்ன?

# இதுதான் சுதந்திரமா?

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை

பெப்ரவரி 4ந் திகதி, இலங்கையின் 22வது சுதந்திர தினத்தை அரசாங்கம் வழமை போல் தனது பாணியில் கொண்டாடியது. இந்தக் கொண்டாட்டத்தில் பீரங்கிகள் முழங்கின; இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது; கொடிகள் பறந்தன; கலாச்சார நிகழ்ச்சிகளும் இன்னும் பல முஸ்பாத்திகளும் இடம் பெற்றன. ஆனால் இந்த வெளிக் காட்சிகளும், வேடிக்கைகளும் நாட்டின் இன்றைய வங்கரோத்து நிலையை மறைக்க முடியாது. 22 வருட 'சுதந்திரத்'திற்குப் பின்னரும் நமது நாடு பிச்சை பாத்திரம் ஏந்துகிற நாடு; ஏகாதிபத்திய தேர்ச் சில்லில் இறுகக் கட்டப்பட்டுள்ள நாடு; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் உள்ள உலக வங்கியில் கடன் பெற்று சீவியம் நடத்துவதற்காக தன்னையும், தனது வளத்தையும், மக்களையும், பின சந்ததியினரையும் ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைத்து வாழ்கின்ற நாடு என்ற உண்மையை 'சுதந்திர' தினக் கொண்டாட்டங்களால் ஒரு போதும் மூடி மறைக்க முடியாது நம்மைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டால் இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம்.

நாடு செழிப்படைந்து வருகிறது; பசுமைப் புரட்சி நடக்கின்றது என்ற யு. என். பீ. யின் பிரச்சாரம் ஓர் அண்டப் புளுகு என்பதை யாரும் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இன்றுபோல் மக்கள் என்றுமே கஷ்ட நிலையில் வாழ்ந்ததில்லை. அத்தியாவசியப் பொருட்கள் யாவும் கிடைப்பதற்கு அரிதாய் விட்டன. அவை கிடைத்தாலும் கள்ளச் சந்தையில்தான் யானை விலை குதிரை விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. முன்னெருபோதும் இல்லாத அளவு வாழ்க்கைச் செலவு விண்ணுக்கு உயர்ந்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந் நாட்டில் வாழ்கின்ற ஆறில் ஒருவர் வேலையில்லாமல் திண்டாடுவதாக சிலர் மதிப்பீடு செய்துள்ளனர். பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை பருத்து முற்றி விட்டது. 15 ஆயிரம் பட்டதாரிகள் வேலை கிடைக்காமல் துயர்ப்படுகின்றனர். கல்வித் துறையை எடுத்துக்கொண்டால்—குறிப்பாக பல்கலைக்கழக மாணவரை எடுத்துக் கொண்டால் அவர்களின் நிலைமை படுமோசமாகியுள்ளது. போதிய கல்வி வசதி இல்லாமை, நூல் நிலைய வசதி இல்லாமை, உதவிப் பணம் போதியளவு இல்லாமை விடுதி வசதி இல்லாமை, படித்து முடிந்தபின் வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமில்லாதநிலைமை, தகுதியும் திறமையுமற்ற கல்வி அமைச்சரினலும் ஈவிரக்கமற்ற அதிகார வர்க்க பெருச்சாளிகளினலும் மாணவர் பிரச்சினை கையாளப்படுதல் ஆகிய இவை யாவும் சேர்ந்து பல்கலைக்கழக மாணவர் மத்தியில் உள்ள அமைதியின்மையை எரிமலையாக்கும் அளவுக்கு கொண்டு வந்துள்ளது.


சம்பளம் பெறுவோரின் வருமானத்தின் மதிப்பு உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினலும் பண வீக்கத்தினலும் குறைந்துவிட்டது. அரசாங்கமோ, அல்லது முதலாளிமார்களோ உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதற்கு எதுவித பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அரசாங்க கூட்டுத்தாபனங்களைப் பொறுத்த வரை, அரசாங்கம் ஒரு சம்பள கமிஷனை நியமித்தது. அக்கமிஷன் செய்த சிபார்சுகளைக்கூட அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை. கூப்பனரிசி பாதியாக குறைக்கப்பட்டது. ரூபாயின் மதிப்பு மூன்றுமுறை குறைக்கப்பட்டது. போக்குவரத்தும் படுமோசமான நிலைமையை அடைந்துவிட்டது. தான் பதவிக்கு வந்தால் கியூ வரிசையை ஒழித்து விடுவதாக யு. என். பி. கூறியது. ஆனல் அது பதவிக்கு வந்த பின்பும் அந்த கியூவின் நீளம் குறையவில்லை. அது அனுமார் வால் போல நீண்டுகொண்டே போகிறது.

இந்தக் கஷ்டங்களும் இன்னல்களும் போதாதென்று, பற்றுக்குறைக்கு வெள்ளமும் தன் கைவரிசையைக் காட்டி விட்டது. எத்தனையோ உயிர்களையும், உடைமைகளையும் அது பலிகொண்டது.

உழைக்கும் சாதாரண மக்கள் இவற்றினல் கஷ்டமும் துயரமுமான நிலையில் வாழும் போது, இதேசமயம், பெரு முதலாளி வர்க்கமும் அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களும் முன்னெப்பொழுதையும் விட இப்போது மேலும் அதிக சுபிட்சமும் வளமும் பெற்றுள்ளனர். யு. என். பி.

2-ம் பக்கம் பார்க்க





சுதந்திரத்தின் விளைவு பாரீர்!

# செல்வந்தர்கள் மேலும் சீமான்களாகின்றனர்

# வறியவர்கள் மேலும் ஏழைகளாகின்றனர்

◎ 1-ம் பக்கத் தொடர்

ஆட்சிக்கு வந்த முதல் வருடமே இவர்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டது. இவ்வளவு காலமும் தடுத்து வைக்கப்பட்டிருந்த லாபத்தில் 15 கோடி ரூபாவை வெளிநாட்டுச் செலாவணி சான்றிதழ் அளிக்காமல் எடுத்துச்செல்ல பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. வறிய விவசாயிகள் நிலம் இல்லாமல் தவிக்கும் போது ஆயிரக் கணக்கான ஏக்கர் முடிக்குரிய நிலம் பெரும் முதலாளிகளுக்கும் கம்பெனிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாளி வர்க்கம் அதிகம் வருமான வரியைச் செலுத்துவதாக மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. செல்வந்தர்கள் மேலும் சீமான்களாகின்றனர். வறியவர்கள் மேலும் ஏழைகளாகின்றனர்.

உணவு உற்பத்தியில் பெரும் சாதனைகளை ஈட்டிவிட்டோம், நம்நாட்டு வயல்களில் பெரும் பசுமைப் புரட்சியை உண்டாக்கிவிட்டோம் என்று அரசாங்கம் சவடால் அடிக்கிறது. ஆனால், முன்பு இறக்குமதி செய்யப்பட்ட அதே அளவு அரிசி இப்போதும் இறக்குமதி செய்யப்படுகின்றது. ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளிகளுக்குக்கூட சோறு கொடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. இவை யாவும் அரசாங்கத்தின் ''விவசாயப் புரட்சி'' வெறும் புளுகு என்பதை நிரூபிக்கின்றன.

## அரசாங்கத்தின் சவடால்

இலங்கையை ஆண்ட அரசாங்கங்களின் பங்கலோட்டுத்தனத்தை அறிந்து கொள்வதற்கு சீனு போன்ற நாடுகளில் மிகக் குறைந்த காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுடன் நமது நாட்டின் குறைந்த அபிவிருத்தியை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்; அரசாங்கம் கூறுவது வெறும் சவடால் என்பது தெட்டென விளங்கும். இன்று சீனம் உலக வல்லரசாக வளர்ச்சியடைந்துவிட்டது. நவீன கைத்தொழில், இயந்திரமயமாக்கப்பட்ட கூட்டுறவு கமத்தொழில், முன்னேறியுள்ள தொழில் நுட்பம் ஆகியன அங்கு உள்ளன. சீனம் தனது 70 கோடி மக்களுக்கும் தேவையான உணவை மட்டுமல்ல, இலங்கை போன்ற தேவையான நாடுகளுக்குக்கூட ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு உற்பத்தியில் பெரும் அபிவிருத்தியை அடைந்துள்ளது. ஆனால் நமது நாடே புதிய காலனி நாடாக இருக்கின்றது.

## ஏகாதிபத்தியப் பிடிப்பு

இந்த தோல்விகளுக்கெல்லாம் காரணம் என்ன? நமது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள—மிக ஆழமாக வேரோடியுள்ள பொருளாதார நெருக்கடிதான் காரணம். ஏதோ ''சுதந்திரம்'' கிடைத்துவிட்டது என்று கூறிக்கொள்கின்ற போதிலும் இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு பூரணமாக கீழ்ப்படுத்தப்பட்டுள்ளதுதான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். நமது நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்புகள் யாவும் — அதாவது தேயிலை ரப்பர் தோட்டங்களில் பெரும் பகுதி, ஏற்றுமதி—இறக்குமதி வர்த்தகத்தில் பெரும் பகுதி, இந்நாட்டிலுள்ள வங்கிகளில் பெரும்பகுதி, கப்பல் போக்குவரத்து இவை போன்ற பிற யாவும் இன்னமும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளினதும் அவர்களின் அடிவருடிகளினதும் கைகளில் தான் உள்ளன. 1965ல் யு. என். பி. மீண்டும் பதவிக்கு வந்த பின்னர் அந்நிய ஏகாதிபத்தியத்தின் தேர்ச் சில்லுடன் நாடு மேலும் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் ஆடுகின்ற பொம்மைகள் யாவும் இலங்கையில் செய்யப்பட்டவை. ஆனால், சூத்திரக்கயிறு இன்னமும் லண்டனிலும், வாஷிங்டனிலும்தான் இழுக்கப்படுகின்றன. அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்காதவரை நமது நாட்டு மக்களுக்கு விமோசனமே கிடையாது; இதனால்தான் எமது பிரதான எதிரிகளான அந்நிய ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், யு. என். பி. யை முக்கிய மையமாகக் கொண்ட அதன் உள்ளூர் அடிவருடிகளையும் அடையாளம் கண்டுகொள்ளுதல் அத்திய வசியமாகின்றது. இப்பொது விரோதிகளுக்கெதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது எமது பிரதான கடமையாகும். ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத, யு.என்.பி. விரோத, இயக்கத்தினை வகுப்புவாத வழிகளில் செலுத்துவது, அல்லது நமது நண்பர்களை எதிரிகளாக்குவது எமது எதிரிகளுக்குச் சாதகமாக அமைவதோடு, எமது நேச அணிகளையும் சீர்குலைக்கும்.

யு. என். பி. இந் நாட்டிலுள்ள தரகு முதலாளித்துவத்தின் கட்சி என்பதையும், நமது நாடு ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருக்க வேண்டும் என அது விரும்புகிறது என்பதையும் நாம் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, அந்நிய ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவதில் யு. என். பீ. யை தூக்கியெறிவதும் அடங்குகிறது.

## ஏகாதிபத்தியக் கொடும் பிடியிலிருந்து நாட்டுப் பொருளாதாரத்தை மீட்காதவரை மக்களுக்கு விமோசனமே இல்லை

## 'இடதுசாரி' கட்சிகளின் போக்கு

யு. என். பி. விரோத சக்திகள் என கூறிக்கொள்ளும் கட்சிகள், தம்மை யு. என். பி. யிடமிருந்து பிரித்துக் காட்டும் அளவுக்கு ஒரு தெளிவான புரட்சிகரக் கொள்கையை முன் வைக்காதது துரதிர்ஷ்டவசமாகும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இந் நாட்டை இரண்டு தடவை ஆண்ட போதிலும் மக்களின் உணர்ச்சிகளை கிளறக் கூடிய மொழி, சமயம் போன்ற பிரச்சினைகளில் காலத்தை செலவழித்ததே தவிர, யு. என். பி. யிலும் பார்க்க கூடுதலாக ஏகாதிபத்தியத்தின் அடிப்படைமீது தாக்குதல் தொடுக்கவில்லை. இடதுசாரி கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் சமசமாஜக் கட்சி, கெனமன் திரிபுவாத கும்பல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன கூட்டாகச் சேர்ந்து தயாரித்துள்ள பொது வேலைத்திட்டம் இந்த நாட்டு வெகுஜனங்களுக்கு எந்த வித புரட்சிகரமான, அல்லது புதிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டமாக இல்லை.

மக்களை மடையர்களாக்கி அவர்களை ஏமாற்றுவதற்கும், அவர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிப்பதற்கும், பாராளுமன்றத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்ற மாயையைப் பரப்புவதற்கும், ஆயுதப் போராட்டத்திற்குப் பதில் வார்த்தைப் போராட்டத்தை நடத்துவதற்கும், ஆயுதப்படைகளை பிரதானமாகக் கொண்ட உண்மையான அரச பீடத்திலிருந்து மக்களின் கவனத்தை திருப்புவதற்கும் ஏகாதிபத்தியவாதிகளாலும், பெரும் முதலாளி வர்க்கத்தாலும் உருவாக்கப்பட்டதே முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்பதை இந்தக் கட்சிகள் காணத் தவறுகின்றன.

## சுரண்டலை பாதுகாக்கும் அரசு இயந்திரம்

மக்கள் மீது நடத்தப்படுகின்ற சுரண்டலுக்கு உண்மையில் பாதுகாப்பளிப்பது, தமது சுரண்டலை பாதுகாப்பதற்காக சுரண்டும் வர்க்கங்கள் பெரும் செலவில் கட்டி அமைத்துள்ள அரசு இயந்திரத்தின் ஒரு பகுதியான - ஏகாதிபத்தியத்தினதும், பெரு முதலாளித்துவத்தினதும் காவல் நாய்களின் கைகளிலுள்ள துப்பாக்கிகள்தான், பாராளுமன்றமல்ல என்பதை இக் கட்சிகள் அறிந்து கொள்ளத் தவறுகின்றன. இந்த முதலாளித்துவ அரசு அடக்குமுறை இயந்திரத்தை நிர்மூலமாக்காமல் - ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவத்தினதும் காவல் நாய்களின் கைகளிலுள்ள துப்பாக்கிகள் உழைக்கும் மக்களின் கைக்கு மாறுமல் - அதாவது புரட்சி ஒன்று இல்லாமல் சுரண்டலை ஒழிக்க முடியாது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றி பெறுவதன் மூலம் இதனைச் செய்திட முடியாது.

எந்தக் கட்சியும் சரி, அல்லது எத்தகைய கூட்டணிகளாயினும் சரி முதலாளித்துவ பாராளுமன்ற தேர்தல்களின் மூலம் ஆட்சிக்கு வந்தாலும் அதனால் மக்களுக்கு எதுவித நன்மையும் விளையப்போவதில்லை என எமது கட்சி கூறுகின்றது. பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் - முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற அபினை மக்களுக்கு இன்னும் சிறிது கொடுப்பதற்கு சகல பாராளுமன்ற கட்சிகளும் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பங்கலோட்டுத்தனமான பாராளுமன்ற பாதையை நிராகரித்துவிட்டு, மாசேதுங் சிந்தனையில் ஒளியூட்டப்படுகின்ற புரட்சிகர பாதையில் அணிதிரளுமாறு எமது கட்சி அறைகூவல் விடுக்கின்றது.

## சமசமாஜ கட்சியின் கருங்காலித்தனம்

பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தின் தர்க்க ரீதியான முடிவின்படி சமசமாஜ கட்சியும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொங்குசதைகளாக மாறிவிட்டன. தற்போது துறைமுகத்தில் நடக்கின்ற வேலைநிறுத்தத்தில் சமசமாஜ கட்சியின் தலைமையிலுள்ள தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது, அக் கட்சியின் மதிப்பை மிகவும் கீழ் மட்டத்திற்குத் தாழ்த்தியுள்ளதோடு, அக் கட்சி குணசிங்கா சென்ற பாதையில் நடைபோடுகின்றது என்பதையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது. சமசமாஜ கட்சியும், கெனமன் திரிபுவாத கும்பலும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை விலைபேசி விற்றுவிட்டு, தொழிலாளி வர்க்கத்திடையே உள்ள முதலாளிவர்க்கத்தின் ஏஜெண்டுகளாக மாறிவிட்டன. சீர்திருத்தவாதம், நவீன திரிபுவாதம் ஆகியவற்றின் நச்சுத்தனமான செல்வாக்கை தொழிலாளி வர்க்கத்திலிருந்து பூரணமாக அழித்தொழிக்காமல் நாம் எவ்வித முன்னேற்றத்தையும் அடைய முடியாது.

இந்த முன்னாள் இடதுசாரிகள் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தி, வாலிபர்கள் மத்தியிலுள்ள சில பகுதிகளை இன்னும் பிழையான புதிய திரிபுவாதம், ட்ரொட்ஸ்கியவாதம், அல்லது கியூபன் மார்க்கம், சே குவேரா மார்க்கம் போன்ற தவறான பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. இவை யாவும் குட்டி முதலாளித்துவ சிந்தனையின் வெளிப்பாடுகளாகும். இவை புரட்சிகர கட்சியின் அவசியத்தையும், புரட்சிகர நடவடிக்கைகளில் வெகுஜனங்கள் பங்குபற்றுவதையும் நிராகரிக்கின்றன.

## நமது கடமை

மார்க்சிஸம்—லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையை புரட்சிகர இயக்கம் கிரகித்துக் கொள்வதன் அவசியம் இதனால்தான் ஏற்படுகின்றது. புரட்சி ஒன்று நடைபெற வேண்டுமானால், புரட்சிகரக் கட்சி ஒன்று இருத்தல் அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அதே போன்று வெகுஜனங்கள் பங்குபற்றினால்தான் புரட்சி வெற்றியீட்ட முடியும். இதனை ஒருசில மனிதர்கள் சாதித்திட முடியாது. புரட்சி வெற்றியடைய வேண்டுமானால், மாசேதுங் சிந்தனையின் புரட்சிகர தத்துவத்தை கிரகித்துக் கொள்வது முதல் தேவையாகும்.

மாசேதுங் சிந்தனையை கிரகித்துக்கொள்வோம். தொழிலாளி வர்க்கத்தின் ஆணிவேருக்குச் செல்வோம். கிராமப் புறங்களுக்குச் சென்று விவசாயிகளை தட்டி எழுப்பி அவர்களை அணிதிரட்டுவோம். தொழிலாளி—விவசாயி ஐக்கியத்தை கட்டி எழுப்புவோம். தொழிலாளி, விவசாயி, புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோரின் ஐக்கியத்தை கட்டி எழுப்புவோம். மக்கள் சேனையைக் கட்டி எழுப்பி மக்கள் யுத்தத்தின் மூலம் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யு. என். பி. ஏனைய உள்நாட்டு பிற்போக்கு சக்திகள் அனைத்தையும் பூரணமாகவும் இறுதியாகவும் தூக்கியெறிவோம்.

# பெப். 7ந் திகதி அகில இலங்கையிலும்

# அடையாள வேலைநிறுத்தம் செய்யுங்கள்

நுவரெலியா மாவட்டம் வட்டகொடைப் பகுதி மடக்கொம்பரை குரூப்பைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர் டிசம்பர் 22ந் திகதி முதல் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. ஒரு தொழிலாளி கூட வேலைக்குப் போக வில்லை.

### கோரிக்கைகள்

1. எல்லா தொழிலாளர்களுக்கும் கிழமைக்கு ஆறு நாள் வேலை கொடுக்க வேண்டும்.
2. வயது வந்த பிள்ளைகளைப் பேர் பதிய வேண்டும்.
3. வேலைநிறுத்தப் போராட்டக் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்களில் பங்கு பற்றியதாகச் சொல்லப்படும் தொழிலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது.

எல்லா தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொதுவான இக் கோரிக்கைகளுக்காக, மடக்கொம்பரை தோட்டத் தொழிலாளர் பொலிசாரின் அடக்குமுறையை அஞ்சாது எதிர்த்து, கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக வீரமிக்க போராட்டத்தை நடத்துகின்றனர். தோட்டத் தொழிலாளர் வேலை கேட்டால், கிழமையில் ஆறு நாட்களும் வேலை கொடுக்க வேண்டுமென இந் நாட்டுச் சட்டம் கூறுகின்றது. ஆனால், துரைமார் பல ஆண்டுகளாக இந்தச் சட்டப்படி வேலை கொடுக்காமல் தப்பி வந்துள்ளனர். தொழில் இலாக்காவோ அல்லது வேறு எந்த அரசங்க சக்தியோ, இந்த 6 நாட்கள் வேலைச் சட்டத்தை அமுல் நடத்த எந்த அக்கறையும் காட்டவில்லை.

### கேவலமான குறைந்த சம்பளம்

ஒரு ஆண், பெண் தொழிலாளிக்கு கிழமையில் 6 நாட்கள் வேலை கிடைக்குமென்ற ரீதியில், சம்பள நிர்ணய சபை

வில்லை. ஆனால், தோட்டத் தொழிலாளர் மட்டும் இந்த தியாகத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர் கூடிய மட்டும் கஷ்டப்பட்டு விட்டனர்; துன்பமடைந்து விட்டனர். அவர்களுடைய வேலை நாட்கள் குறைக்கப் பட்

னத்தை தமது உழைப்பால் உற்பத்தி செய்யும் தோட்டத் தொழிலாளரை கசக்கிப் பிழிந்தனர். தோட்டத் தொழிலாளரின் இரத்தத்திலும், வியர்வையிலும் செல்வத்தை சேகரித்தனர்; கொள்ளை கொள்ளையாக சீமைக்கு செல்வத்தை கப்பலேற்றினர்; தேயிலைந் கொழுந்

யம் நடுங்குகின்றது. தங்களுடைய கொடுங்கோலாட்சி சிதறி உடைவதைக் காண்கின்றனர். புதிய இராமசாமியையும் மீனாட்சியையும், புதிய டேவிட் சிங்கோலையும் லீலாவதியையும் காண்கின்றனர். ஆனாலும் துரைமார் இலேசில் சரணாகதியடைய மாட்டார்

# மடக்தும்பரை தோட்டப்போராட்டத்தை ஆதரியுங்கள்

ஆணுக்கு ரூ. 3.01 சதத்தையும், பெண்ணுக்கு ரூ. 2.45 சதத்தையும் குறைந்த பட்ச சம்பளமாக நிர்ணயித்தது. இதுவோ வாழ்க்கை நடத்த முடியாத, கேவலமான குறைந்த சம்பளம். ஆனால், தோட்டத் தொழிலாளருக்கு 6 நாட்கள் வேலை கிடைக்காமல், கிழமையில் 3 அல்லது 4 நாட்கள் மட்டும் வேலை கிடைப்பதால் இந்த குறைந்த பட்ச சம்பளச் சட்டமும் கேலிக் கூத்தாகி விட்டது.

டன; அரிசி வெட்டப்பட்டது; வாழ்க்கைச் செலவு வானளாவ வளர்ந்து விட்டது. இன்று அவர்கள் வாழ முடியாத கட்டத்தை அடைந்து விட்டனர்.

### கெஞ்சினோம் கிடைக்கவில்லை கொதித்தெழுவோம் கோரிக்கை பெற

தோட்டத் தொழிலாளர் இவ்வளவு காலமும் கெஞ்சினார்கள்; கும்பிட்டார்கள்.

தின் கலரைக் கூட காணாத முதலாளிமார்களிடம் இச் செல்வத்தைக் குவித்தனர்.

இலங்கைத் தொழிலாளரிடையே மிகவும் மோசமாக சுரண்டப்பட்டு மிகவும் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்றனர் தோட்டத் தொழிலாளர். அது மட்டுமா? தோட்

கள். மாபெரும் தலைவர் மாசேதுங் ''எல்லா பிற்போக்குச் சக்திகளும் ஒன்றே; தாக்காமல் விழாது. இது தரையைக் கூட்டுவது போன்றது. தும்புக்கட்டை கூட்டாத இடத்திலிருந்து தூசி தானாக போகாது'' எனக் கூறியுள்ளார். இந்த உண்மையை எல்லா தோட்டத் தொழி

# செங்கொடி சங்கத்தின் அறைகூவல்

இலங்கையிலுள்ள மற்ற தனியார் துறைத் தொழிலாளர் நாளுக்கு ரூ. 7.50 சதம் என்ற அடிப்படையில் மாதம் 225/- ரூபா சம்பளம் வேண்டுமென கோரிக்கை விடும்போது, தோட்டத் தொழிலாளர் ரூ. 3.01 சதம் என்ற அடிப்படையில் 6 நாட்கள் வேலை கேட்டுப் போராடும் பரிதாபகரமான நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

தோட்ட துரைமாரினதோ அல்லது தோட்ட உத்தியோகத்தினரினதோ சம்பளத்தின் ஒரு பகுதிதானும் பரி போக

கெஞ்சிய தொழிலாளரின் முகத்திலே எச்சியைத் துப்பினர் துரைமார்கள். **ஆகவே இன்று போராடக் கிளம்பி விட்டான் தோட்டத் தொழிலாளி.** இது தான் துரைமாருக்கு விளங்கும் பாஷை. ஆகவே எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொதுவான கோரிக்கைகளுக்காக மடக்கொம்பரை தொழிலாளர் போராடுகின்றனர்.

தொழில் அமைச்சரும், தொழில் கமிஷனரும் இப் பிரச்சினையைத் தீர்க்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை- தோட்ட நிர்வாகம் விட்டுக் கொடுக்காததால்.

### பொது வேலைநிறுத்தம்

ஆகவே, செங்கொடிச் சங்கமும், இ. தொ. காங்கிரசும் மடக்கொம்பரை தொழிலாளரின் போராட்டத்திற்கு ஆதரவாக பெப்ரவரி மாதம் 7ந் திகதி அடையாள வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென அறைகூவல் விடுத்துள்ளன. எல்லா தோட்டத் தொழிலாளர்களும் அடையாள வேலை நிறுத்தம் செய்வது மட்டுமல்லாமல், கிழமைக்கு 6 நாட்கள் வேலை வேண்டுமென்ற கோரிக்கைக்காக பொது வேலைநிறுத்தம் செய்யவும் தயார் பண்ண வேண்டும்.

### தோட்டத் தொழிலாளரின் சோக வாழ்க்கை

ஆண்டாண்டு காலமாக (பிரிட்டிஷ்) வெள்ளைக்கார ஏகாதிபத்திய துரைமாரும், கறுப்புத் துரைமாரும் இலங்கையின் பெரும் பகுதி வருமா

டத் தொழிலாளரின் பெரும்பான்மையோருக்கு அரசியல் உரிமையில்லை; குடியுரிமையில்லை; ஜனநாயக உரிமையில்லை; ஓட்டு உரிமையில்லை, எந்த நேரமும் கள்ளத் தோணியென கைதுசெய்யப் படக்கூடிய கேவல நிலையில் உள்ளனர். மிருகங்களைப் போல் நடத்தப்படுகின்றனர்.

### புரட்சிப் பாதை

தோட்டத் தொழிலாளர் இந்த கேவல வாழ்க்கையை தொடர்ந்தும் நடத்தத் தயாரில்லை. செங்கொடிச் சங்கத்தின் புரட்சிகர தலைமையில், வெற்றிவாகை சூடும் மாசேதுங் சிந்தனை காட்டும் பாதையில், தோட்டத் தொழிலாளர் இன்று கொதித்தெழுந்துள்ளனர். காக்கிச் சட்டைக்காரர்களையோ, தோட்டத் துரைமாரின் காவல் நாய்களின் கைகளிலுள்ள துப்பாக்கிகளையோ கண்டு அவர்கள் அஞ்சவில்லை. தோட்டத் தொழிலாளர் ஒன்றுபட்டால்- சாதி, சமய, இன, மொழி பேதமின்றி ஸ்தாபனரீதியில் திரண்டெழுந்து திருப்பித் தாக்கிப் போராட தயாரென்றால்-அவர்களை அடக்கக்கூடிய சக்தி இல்லை என்பதை இன்று தோட்டத் தொழிலாளர்கள் உணர்ந்து விட்டனர்.

### தூசும் துடைக்காமல் போகாது; துயரமும் தானாக நீங்காது! துரைமார் ராஜ்யம் நடுங்குகின்றது

போராடும் தொழிலாளரைக் கண்டு துரைமார் ராஜ்

லாளரும் உணரவேண்டும். இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினர் தாம் என்பதை அறிய வேண்டும். அவர்கள் ஒரு புரட்சிப் பாதையின் கீழ் ஒன்று திரண்டு போராடினால் வெற்றிவாகை சூடமுடியும். இந்த உயர்ந்த கடமையைச் செய்யவே செங்கொடிச் சங்கம் சிங்களத் தொழிலாளர்களையும், தமிழ் தோட்டத் தொழிலாளரையும் அறைகூவி அழைக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களே! நீங்களோ இலட்சக் கணக்கானோர்— உங்களுடைய எதிரிகளோ சிறு தொகையினர். ஆனாலும் அவர்கள் இங்கு பலமிக்கவர்களாயுள்ளனர். காரணம் தொழிலாளரிடையே பிளவுள்ளது; தொழிலாளர் பிரிந்துள்ளனர். துரைமாரைப் பாதுகாக்க காவல் நாய்களாக பொலிஸ் படையும், பட்டாளமும் உள்ளன. அவர்கள் கைகளிலோ துப்பாக்கி. ஆனாலும் நாம் பெரும்பான்மையினரென்பதால், நாம் ஸ்தாபனரீதியில் அணிதிரண்டால், நாம் போராடத் தயாரென்றால் இப் பிற்போக்குச் சக்திகளை ஒழிக்க முடியும்.

மடக்கொம்பரை போராட்டத்தை ஆதரியுங்கள்!

7ந் திகதி வேலை நிறுத்தத்தில் குதியுங்கள்!

பொது வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தயார் செய்யுங்கள்!

தியாகத்திற்கு அஞ்சாதீர்கள்!

சகல கஷ்டங்களையும் கடவுங்கள்!

வெற்றிவாகை சூடுங்கள்!


விரைவில் வெளிவருகிறது




சிறுகதைத் தொகுதி

தொழிலாளி

# புரட்சிகர கம்யூனிஸ்ட் பாதை
# வெற்றியடையச் செய்தல் வேண்

**"அவுஸ்திரேலியன் கம்யூனிஸ்ட்" எனும் மாத சஞ்சிகையில் வெளியான 'மாணவர் இயக்கத்தில் எதிர்ப் புரட்சிகர போக்குகள்' எனும் கட்டுரையின் தமிழாக்கம்.**

**சரித்திரரீதியாகப் பார்த்தால், கம்யூனிஸ இயக்கத்தின் மீது உள்ளேயிருந்தும், வெளியிலிருந்தும் தத்துவார்த்த தாக்குதல்கள் நடைபெற்று வந்துள்ளன. மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனைக்கு திரிபுவாத, வரட்டுந் தத்துவவாதே, கருத்துக் கருத்துக்மள் எப்போதுமே சவால்விட்டவண்ணமிருக்கின்றன. மாணவர் இயக்கத்திற்கும் இவ்வுண்மை பொருத்தமாகும். கருத்துக்களின் மோதல்களின் போது, சரியான தத்திதுவார்த்தத்திற்கான வெளிப்படையான போராட்டம் முக்கியத்துவம் அடைகின்றது.**

## மார்க்சிஸ விரோத மாயைகள்பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும்

முதலாளித்துவத்திற்கு எதிரான உலகம் பரந்த தொழிலாளர், மாணவர் கிளர்ச்சிகளில் அவுஸ்திரேலிய மாணவர்களும் பங்குபற்றுகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தற்போது, மாணவர்களே, அவுஸ்திரேலிய மக்களில் அரசியல் ரீதியில் மிகவும் தீவிரமான பகுதியினராவர். இந்த மாணவ கிளர்ச்சியாளர்களுக்கு கம்யூனிஸ்டுகள் முழு ஆதரவையும் அளித்து வந்துள்ளனர். தொடர்ந்தும் ஆதரவு அளிப்பர். இக் கிளர்ச்சியை புரட்சியாக மாற்றுவதற்கு கம்யூனிஸ்டுகள் மாணவர் மத்தியில் வேலை செய்து வந்துள்ளனர். இனிமேலும் தொடர்ந்து வேலை செய்வர்.

### பிழையான கண்ணோட்டம்

மாணவர்கள் மத்தியில் மிகவும் புரட்சிகரமானவர்கள் கூட பொதுவாக கம்யூனிஸத்தையும், மாசேதுங் சிந்தனையையும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் தம்மை ஒருவித குறிப்பிட்ட பகுதியினருடனும் காட்டிக்கொள்ளாமல் வெறும் "புரட்சிகர சோஷலிஸ்ட்டுகள்" என தம்மை அழைத்துக்கொள்கின்றனர். அல்லது அராஜக ட்ரொட்ஸ்கிய, கஸ்ட்ரோயிஸ, மார்க்கியூஸ, கிராம்ஸி வாதிகளாக தம்மைக் காட்டிக் கொள்கின்றனர்.

தத்துவார்த்தம் அவ்வளவு முக்கியமானதல்ல, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அனைவரும் ஒரு சிறு படைக்குப் பின்னால் ஐக்கியப்பட வேண்டுமென்ற கஸ்ட்ரோ வாதம் அதிகமாக கவரும் தன்மையுள்ளது. மாணவர் இயக்கத்திலுள்ளவர்கள் தம்மை வெவ்வேறுவாதிகளாக காட்டிக் கொண்டபொழுதிலும் மாணவர் இயக்கத்தின் தன்மையைப் பார்க்கும்போது, உண்மையில் இந்த லேபல்கள் அவர்களுக்குப் பொருத்தமானவையல்ல. முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக நோகாமல் கிளர்ந்தெழுபவர்கள், சில வேளைகளில் இவற்றின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல்கூட கிளர்ந்தெழுபவர்கள் இத்தகைய லேபல்களை தமக்கு சூட்டிக்கொள்வது வழக்கம்.

### விமர்சிக்கப்படவேண்டும

இது தம்மை "மாஓவாதிகள்" எனக் கூறிக்கொள்ளுகின்றவர்களுக்கும் பொருந்தும். ஏனையவர்களைப் போன்றே இவர்களும் நடந்து கொள்ளுகின்றனர். மார்க்சிஸம்—லெனினிஸத்தை ஏற்றுக்கொள்பவர்கள் 'மாணவர் சக்தி' அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரம்-திரிபுவாதத்தை எதிர்ப்பதன் அவசியம் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளின்மீது நடைபெறுகின்ற தத்துவார்த்த வாதப் பிரதிவாதங்களில் வெற்றியடைகின்றனர். நடைமுறை போராட்டத்தின் போது பிழையற்ற கொள்கை வெற்றிபெறும்.

ஆனல், மார்க்சிஸ—லெனினிஸவாதிகள் ஒருபோதுமே எவ்வித நிகழ்வையும் எதுவித விமர்சனமுமின்றி ஏற்றுக்கொள்ளக்கூடாது. இது மாணவர் இயக்கத்திற்கும் பொருந்தும். நாம் மாணவர் கிளர்ச்சியை ஆதரிக்கின்றோம் என்று கூறுவது மட்டும் போதாது, இக் கிளர்ச்சியை சரியான, விஞ்ஞானரீதியான ஆராய்வு செய்ய வேண்டும். பொது ஆதரவைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது ஆதரவை பயன்படுத்த முடியும். மாணவர் இயக்கத்தினுள் பல முரண்பாடுகள் உள்ளன என்பதில் ஐயமில்லை. இவைதத்துவார்த்த துறையில் கடுமையான, சிக்கலான வர்க்கப் போராட்ட வடிவத்தை எடுக்கின்றன. எனவே, மார்க்சிஸம்—லெனினிஸத்திற்குப் புறம்பான பல்வேறுபட்ட போக்குகளை சரியாக அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். மாணவர்களைப்பற்றி "வென்கார்ட்", "அவுஸ்திரேலியன் கம்யூனிஸ்ட்" ஆகிய இதழ்களில் பிரசுரிக்கப்படுகின்ற விஷயங்கள் யாவும் புரட்சிகர கம்யூனிஸ மார்க்கத்தை மாணவர்கள் மத்தியில் வெற்றியடையச் செய்யும் போராட்டத்திற்கு பயன்படுத்த முடியும். பொது ஆதரவை அளிப்பதற்கும், பயன்படுத்த முடியும்.

### தத்துவார்த்த வாதப்பிரதிவாதம் நடைபெற வேண்டும்

நவீன திரிபுவாதம் பற்றி எழுகின்ற வேறுபாடுகளைத் தட்டிக்கழிப்பது அல்லது சிரத்தை கொள்ளாமல் விடுவது, "புதிய இடதுசாரி"களின் குணுதிசயங்களில் ஒன்ருகும். அராஜகவாதிகள், ட்ரொட்ஸ்கியவாதிகள், கஸ்ட்ரோவாதிகள், கிராம்ஸ்கி வாதிகள் போன்ற அனைவரும் மார்க்சிஸம்—லெனினிஸம் தேவையற்றதெனக் கருதுகின்றனர். எனவே, தத்துவார்த்த வாதப் பிரதிவாதத்தை தவிர்க்க முனைகின்றனர். பல்வேறுபட்ட முதலாளித்துவ சிந்தனைகள் யாவும் சோஷலிஸத்தைக் கட்டி வளர்ப்பதற்கான தொழிலாளர், மாணவர் ஐக்கியத்தை மக்களின் கவனத்திலிருந்து திசைதிருப்புவதற்கும், முதலாளித்துவ சமுதாயத்திற்குள் இரண்டறக் கலப்பதற்கும் உதவுகின்றன என்று நாம் கருதுகிறோம். முரண்பாடுகளை வெளியில் கொண்டுவருவதற்கும், மாசேதுங் சிந்தனை மார்க்கத்திற்கு அமைய அவற்றைத் தீர்ப்பதற்கும் தத்துவார்த்த வாதப் பிரதிவாதம் நடைபெற வேண்டுமென நாம் கருதுகிறோம். எதுவித விமர்சனமுமின்றி பல்வேறு மாணவர் போராட்டங்களை வெறுமனே வானளாவப் புகழ்ந்துகொண்டும், அல்லது அவற்றைக் குறிப்பிட்டுக்கொண்டும் எம்மால் இருக்க இயலாது.

பல மாணவர்கள் தொழிலாளி வர்க்கம் அல்லாத பின்னணியைக் கொண்டுள்ளதாலும் அவர்கள் வர்க்கப் போராட்டம், உற்பத்தி ஆகியவற்றிலிருந்து பிரிந்து இருப்பதனுலும் அகநிலைவாதம், தன்னிச்சைவாதம் போன்றவை வளர்வதற்கு இலகுவாக இருக்கின்றன. "சகலமும் நிறைந்த சமுதாயம்" என்ற மாயையைப் பாவிப்பதன் மூலம் தொழிலாளி வர்க்கம், முற்போக்கான சமுதாய சக்தியென்ற நிலையை இழந்துவிட்டது என்ற எண்ணத்தை முதலாளித்துவம் பரப்புகின்றது.

மார்க்கியூஸ், கிரேம்ஸ்கி போன்ற "புதிய இடதுசாரி" தத்துவ ஆசிரியர்கள் சகலருக்கும் தெரிந்த முதலாளித்துவத்தின் சீர்கேட்டைக் கண்டிக்கின்றோம் என்று கூறிக்கொண்டே இக் கருத்துக்களைப் பரப்புகின்றனர். புத்திஜீவிகள் சமுதாய மாற்றத்தின் ஏஜெண்டுகள் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொண்டும், "சுயநிர்வாகம்" என்பது பற்றிய பிரச்சினையை ஏதோ தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறிக்கொண்டும், இப் "புதிய இடதுசாரி"கள் வர்க்கப் போராட்டத்தை மூடி மறைக்கின்றுர்கள். தொழிலாளர், மாணவர் ஐக்கியத்தை திசை திருப்புகின்றுர்கள்.

### முதலாளித்துவ வாழ்க்கை முறையின் வளர்ச்சி

சீர்திருத்தவாத கருத்துக்கள் பழைய குருஷ்சோவிய திரிபுவாதத்தைப்போன்று செல்வாக்கை இழந்து வருகின்றன. (சோவியத் யூனியன் அல்லது பழைய அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது தாம் கொண்டுள்ள பழமையான விசுவாசத்தினுல் சில மாணவர்கள் தம்மையறியாமலே எதிர்ப் புரட்சித் தன்மையை ஏற்றுள்ளனர்.) எனவே, முதலாளித்துவ வர்க்கம், முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே அவர்கள் இயங்குவதை மாணவர்களை ஏற்றுக் கொள்ளச்செய்வதற்கு அதிகம் முயற்சி எடுக்காமல் புரட்சியில் ஆகர்ஷிக்கப்பட்டவர்களை தமது சக்திகள் யாவற்றையும் முதலாளித்துவ அமைப்புக்கு தீங்கிழைக்காத வழிவகைகளில் விரயம் செய்வதற்கு அவர்களை திசைதிருப்புவதற்கு முயல்கின்றனர்.

சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்குப் போராடுவதற்குப் பதிலாக "ஹிப்பி" வாழ்க்கை முறையை பரப்புகின்றனர். ஏதோ வெளிப்படையாக இதனை கண்டிக்கவும் செய்கின்றனர். சில "புரட்சிகர" தலைவர்கள் தன்னிச்சையான அராஜகவாத தத்துவார்த்தங்களை புரட்சிகர இயக்கத்தின் பகுதிகளாகக் கருதுகின்றனர். குறிப்பாக, ட்ரொட்ஸ்கியவாதிகள் ஒருவகையான "இடதுசாரி கலாச்சாரம்" (இதற்கும் சோஷலிஸத்திற்கும் ஒட்டுமில்லை-உறவுமில்லை.) என்ற ஒன்றை வளர்க்க ஆதரவளிக்கின்றனர். சில உயர்தர கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர்களின் நடுத்தர வர்க்க மிதவாதத்திற்கு "புரட்சிகர" தன்மையை அளித்து பயன்படுத்துவதற்காகவே இதனை ட்ரொட்ஸ்கியவாதிகள் வளர்க்கின்றனர். "கட்டுப்பாடற்ற பாலுணர்வு," மாத்திரைகள், போதைப் பொருட்கள் பாவித்தல் போன்றவற்றை "முதலாளித்துவ வாழ்க்கை" முறைக்கு எதிராகப் பாவிக்கப்படுகின்றது. உண்மையில் இவை யாவும் முதலாளித்துவ வாழ்க்கை முறையின் வளர்ச்சியேயாகும்.

அதே வேளையில், ட்ரொட்ஸ்கிய வாதம் மாணவர்களை மத்தியதர மிதவாத நிலையில்

# தையை மாணவர் மத்தியில்

## ண்டும்

வைத்துக்கொண்டு அரசியல் போராட்டங்களுக்கு மாற்றமடையாதவர்களாக இந்த அமைப்புக்குள்ளேயே இயங்குவதை வளர்க்கின்றது. ''தொழிலாளி வர்க்கத்தில் தங்கி நிற்கின்றது'' என்று கூறிக்கொண்டே ட்ரொட்ஸ்கியவாதிகள் சமூக ஜனநாயகவாதிகளுடனும், திரிபுவாதக் கட்சிகளுடனும் ஒத்துழைக்க வேண்டுமென கூறுகின்றனர். இக் கொள்கை தோல்விமேல் தோல்வியடைந்துகொண்டே வருகிறது.

### ட்ரொட்கியவாதமும் சேகுவாரா வாதமும

ட்ரொட்ஸ்கியவாதமும், கஸ்ட்ரோவாதமும் ''கலாச்சார'' கொள்கையில் ஏறக்குறைய ஒத்துழைக்கின்றனர் உண்மையில், சேகுவேரா ட்ரொட்ஸ்கியவாதிகளின் பிரதான நாயகனுவான். பலபுத்தகங்கள் பிரச்சாரக் கருவிகள் மூலம் சேகுவேரா பிரச்சாரப் படுத்தப்படுகின்றான். சர்வதேச விஷயங்கள், சரித்திரம் ஆகியவற்றிலும் இவ்விரு பகுதியினரும் ஒன்றுபட்டுள்ளனர். சீனவும், ரஷ்யாவும் அவர்களுக்கு ''அதிகார''த்துவவாத அரசாகத் தெரிகிறது. எந்தவொரு கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்டாலினுக்குப் பின்னர் புரட்சிகரகட்சியாக இருந்ததில்லை. சீனினும் திரிபுவாத கட்சிகளும், மார்க்சிஸ—லெனினிஸ கட்சிகளும் அவர்களுக்கு ''ஸ்டாலினிஸக்'' கட்சிகளாகத் தெரிகின்றன. சகலரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஐக்கிய முன்னணியில் சேர வேண்டுமாம். கியூபா, வியட்நாம், வடகொரியா இவையாவும் உலகப் புரட்சியின் மத்திய ஸ்தானமாகத் திகழ்கின்றனவாம். இன்னும் பல கஸ்ட்ரோவாதம், திரிபுவாதத்துடன் சர்வதேச ரீதியிலும், சிலவேளை அவுஸ்திரேலியாவிலும் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளை ஆதரிக்கின்ற அதே நேரத்தில், அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சியைப் பொறுத்தவரையில் அது, அக்கட்சியுடன் ஐக்கியமுற வேண்டுமென ட்ரொட்ஸ்கியவாதிகளைப்போல் கூறவில்லை. இந்த வகையில் அது, ட்ரொட்ஸ்கியவாதத்திலும் பார்க்க, ''இடதுசாரி''யாகத் திகழ்கின்றது. கஸ்ட்ரோவாதம் சகலவித வெகுஜன வேலைகளையும் நிராகரிக்கின்றது. கஸ்ட்ரோவாதம் தன்னிச்சை வாதத்தின் கூட்டுச் சேர்க்கையே. கியூபா, குட்டி முதலாளித்துவ வர்க்க மாணவர்களிடையே சூரத்தன எண்ணங்களை வளர்க்கின்றது. வெகுஜனங்களிலிருந்து பிரிந்து ஒருசில உறுதியுள்ள (தாடி வைத்துள்ள) மனிதர்கள் புரட்சியை நடத்த முடியும் என கஸ்ட்ரோவாதம் பிரகடனம் செய்கிறது. ஒருபுறத்தில், கஸ்ட்ரோவாதிகள் வெளிநாடுகளில் ஏகாதிபத்திய விரோத போராட்டங்களுடனுன ஐக்கியத்தை, அவுஸ்திரேலியப் புரட்சிக்கு எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக முன் வைக்கின்றது. மறுபுறத்தில், டெபெரே, சேகுவேரா ஆதரவாளர்கள் ஒருசில மனிதர்கள் அவுஸ்திரேலியாவில் புரட்சியை நடத்திவிட முடியும் எனக் கூறுகின்றார்கள். சேகுவேராவை, அவர் கியூபா புரட்சியின் போதும், அதற்குப் பிந்திய போராட்டங்களின்போதும் காட்டிய தனிப்பட்ட வீரம், உறுதி ஆகியவற்றிற்காக வணங்குகின்றார்கள். (எனினும், அவரது வீரச் செயல்கள் பெரிதாக இருந்த பொழுதிலும் மிகவும் கஷ்டமான நீண்ட காலத்தை எடுத்த சீனப் புரட்சி. வியட்நாம் புரட்சி ஆகியவற்றில் முன்னின்ற எண்ணற்ற தலைவர்கள், வீரர்கள் ஆகியோரின் வீரத்திலும், உறுதியிலும் பார்க்க மேன்மையாக இருக்க முடியாது. இவர்கள் சேகுவேரா போன்று பிரச்சாரப் படுத்தப்படுவதில்லை., சேகுவேரா ஒரு தனிப்பட்ட வீரனுக இருக்கலாம், ஆனுல்' அவர் புரட்சிகர வீரமுடையவர் எனக் கூற முடியாது. நீண்டகால போராட்டமற்ற, புரட்சிகர கட்சியின் கட்டுப்பாடற்ற, மார்க்சிஸ—லெனினிஸ சித்தாந்தங்களைப் பற்றிய கவலையற்ற இலகுவான, மிக விரைவில் தீர்வுகளை காண விரும்புகின்ற, விரக்தியடைந்த ஒரு புத்திஜீவிக்கு இவர் ஏதோ பெரிதாகத் தெரியலாம். சேகுவேராவை பொலிவியாவில் மரணத்துச்கு அழைத்துச் சென்ற, மக்களோடு தொடர்பற்ற போராட்டம்தான் அவுஸ்திரேலிய மாணவர்களுக்கான போராட்டப் பாதையாகக் காட்டப் படுகிறது.

### விழிப்புத் தேவை

இப் பிற்போக்கு கருத்துக்களை நிராகரித்து அவற்றிற்கு எதிராக நாம் போராடுகின்ற வேளையில் மக்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகளுக்கும், நமக்கும் எதிரிகளுக்குமிடையிலுள்ள முரண்பாடுகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகளை மனதில் வைத்திருப்பது அவசியமாகும். சீர்திருத்தவாதம், வீரச் செயல்கள், தனிநபர் வாதம் ஆகியவற்றிற்கு எதிராக மார்க்சிஸ—லெனினிஸ மாணவர்கள் கடுமையான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். ''நோயாளியைப் பாதுகாப்பதற்காக நோயைக் குணப்படுத்துவதே'' இதன் நோக்கமாகும். மாசேதுங் சிந்தனை வெற்றி ஈட்டிச் செல்கின்றது. அது இறுதி வெற்றியை வாகைசூடும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. புரட்சிக்காக போராடுகின்றவர்களிடமிருந்து எம்மை நாம் தனிமைப்படுத்த வேண்டியதில்லை. ஆனுல், பல்வேறுபட்ட மார்க்சிஸ விரோத மாயைகள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும்.

---

# பாலஸ்தீன் பிரச்சினையில் ரஷ்யாவின் நயவஞ்சக நாடகம்

அரபு மக்களின் இலட்சியத்தைப் பொறுத்த மட்டில் சோவியத் ரஷ்யா நயவஞ்சகமானப் போக்கைக் கடைப் பிடிக்கிறது. அத்துடன், மத்திய தரைக்கடல் பிராந்தியத்திலே எதுவிதத் தொல்லையும் இன்றி ஸியோனிஸ்டுகள் தொடர்ந்து வாழ வழிவகுக்கும் ''சமாதானத் தீர்வு'' ஒன்றினை அரபு மக்களுக்கும், ஸியோனிஸ்டுகளுக்கும் இடையே கொண்டு வரவும் முனைகிறது. இதற்காக எமது இயக்கம் சோவியத் ரஷ்யாவைக் கண்டிக்கிறது.''

இவ்வாறு இலங்கை பாலஸ்தீன் ஆதரவு இயக்கம் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது. மேற்படி இயக்கம், பல்வேறு துறைகளையும் சார்ந்த வாலிபர்களினுல் சமீபத்தில் கொழும்பில் உருவாக்கப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், ஸியோனிஸத்துக்கும் எதிராக பாலஸ்தீன மக்களும் இதர அரபுநாடுகளது மக்களும் நடத்தும் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவாக இவ்வியக்கம் பிரச்சாரம் செய்யவும் வெகுஜன நடவடிக்கைகளில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளது. இயக்கம் விடுத்துள்ள அறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

இவ்வாறுன போலி நண்பர்களைப் பற்றி எமது இயக்கம் அரபு மக்களை எச்சரிப்பதுடன், அரபு மக்களின் இலட்சியத்துக்கு உண்மையிலேயே துரோகமிழைப்போரான இப் போலி நண்பர்களையிட்டு விழிப்பாக இருக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறது. அரபு மக்களின் போராட்டம் வெற்றிகரமாக முன்னேறிச் செல்ல வேண்டுமானுல் இந்தப் போலி நண்பர்கள் வகிக்கும் நயவஞ்சகமான, துரோகத்தனமான பாத்திரத்தை அம்பலப் படுத்தியேயாக வேண்டும்.

ஸியோனிஸ இராஜ்யமாகிய இஸ்ரேலை அழித்தொழித்து பாலஸ்தீனத்தை விடுதலை செய்வது என்ற அரபு மக்களின் இலட்சியத்துக்கு எமது இயக்கம் பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றது.

ஏகாதிபத்தியக் கைக்கூலியான இஸ்ரேலுக்கு எதிராகத் திடமாக ஆயுதந்தாங்கிய போராட்டம் நடத்துகின்ற வீரமிக்க கொரில்லா ஸ்தாபனங்களான பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனத்துக்கும், அல்-பத்தாஹ் என்று அழைக்கப் படுகின்ற பாலஸ்தீன் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் எமது இயக்கம் தனது உறுதியான, தெட்டத் தெளிவான ஆதரவைப் பிரகடனப்படுத்துகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும் மற்றும் ஏகாதிபத்தியங்களாலும் மூச்சு முட்ட ஆயுதபாணியாக்கப் பட்டுள்ள இஸ்ரேலை எதிர்த்துப் போரிடுவதில் காண்பிக்கும் துணிச்சலையும் போராட்ட உறுதியையுமிட்டு பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனத்தையும் அல் - பத்தாஹ்வையும் சகல கொரில்லாப் போராளிகளையும் பாலஸ்தீன மற்றும் இதர அரபு நாடுகளைச் சேர்ந்த மக்களையும் எமது இயக்கம் போற்றுவதுடன், அவர்களுக்கு மரியாதையையும் தெரிவித்துக் கொள்கிறது.

இஸ்ரேலுக்கும் அதன் தேச விஸ்தரிப்புப் போராசைகளுக்கும் தொடர்ச்சியான ஆதரவை அளித்து வருவதற்காக அமெரிக்க, பிரிட்டிஷ், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனிய ஏகாதிபத்தியவாதிகளையும் சகல பிற்போக்காளர்களையும் எமது இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஸியோனிஸ இராஜ்யமாகிய இஸ்ரேல் உலக ஏகாத்பத்தியத்தின், குறிப்பாக, அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் சிருஷ்டியாகும். அரபு மக்க

## இலங்கை - பாலஸ்தீனிய ஆதரவு இயக்கம் கண்டனம்

ளின் ஐக்கியத்தையும் 1 கோடி அரபு மக்களிடையே ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சியையும் சீர்குலைக்கும் பொருட்டும், எண்ணெய் வளம் படைத்த அரபு நாடுகளைச் சுரண்டி சூறையாடும் பொருட்டும்தான் இஸ்ரேல் அரபு மக்களின் இதயத்தில் நச்சுக் கத்தியாகப் பாய்ச்சப்பட்டது. அமெரிக்காவின் தலைமையிலான உலக ஏகாதிபத்தியத்தின் ஆதரவும் உதவியும் இல்லாமல் இஸ்ரேலால் தனியொரு நாளைக்குத்தானும் ஜீவிக்க முடியாது. உலக ஏகாதிபத்தியத்தின் தலைவனுன அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் அரபு மக்களதும், உலக மக்களதும் முதலாம் நம்பர் எதிரி.

ஐக்கிய நாடுகள் சபையையும், பெருவல்லரசுகளையும் அவற்றிற்கிடையே நடைபெறும் ''பேச்சுவார்த்தைகளை''யும் நேரடியாக, தயவு தாட்சண்யமின்றி கண்டித்தமைக்காக எமது இயக்கம் பாலஸ்தீன் மக்களையும் இதர அரபு நாடுகளின் மக்களையும் பாராட்டுகிறது. ஐ. நா. சபைத் தீர்மானங்களோ, அன்றேல் அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றிற்கிடையே நடைபெறும் நான்கு வல்லரசுகள் பேச்சுவார்த்தைகளோ, அன்றேல் அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்குமிடையே நடைபெறும் ''இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளோ'' அரபு மக்களுக்கு உதவப்போவதுமில்லை; நியாயம் வழங்கப் போவதுமில்லை.

ஜூன் 5 (1967)ம் திகதி யுத்தத்துக்கு முன்பிருந்த எல்லைக்கு இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெற வேண்டுமென சிலர் கோருகின்றனர். இப்படி வெறுமனே வாபஸ் பெறுவது மட்டும் இஸ்ரேலை உலக தேசப் படத்திலிருந்து எவ்விதத்திலும் அழித்து விடாது என்பதை எமது இயக்கம் சுட்டிக் காட்டுகிறது. மாறுக பலஸ்தீனத்தை இஸ்ரேலியர்கள் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றிக்கொண்டு தொடர்ந்து இருப்பதற்கும் மத்திய கிழக்கிலே சமாதானத்துக்கு நிரந்தரமான அச்சுறுத்தலை தோற்றுவித்துக் கொண்டிருப்பதற்கும் இஸ்ரேலியர்களை இப்படியான ''வாபஸ்'' அனுமதிக்கும். எனவே, இஸ்ரேலை சர்வ சம்பூரணமாக அழித்தொழிப்பதற்கும், பாலஸ்தீனத்தை விடுதலை செய்வதற்கும், பாலஸ்தீன் மக்களின் ஆயுதந் தாங்கியப் போராட்டத்திற்கும், இப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கும் பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனத்துக்கும் அல் - பத்தாஹ்வுக்கும் ஆதரவை வழங்கினுல் மட்டுமே அரபு மக்களுக்கு அளிக்கும் எவ்வித ஆதரவும் உண்மையானதாகவும், அர்த்தமுடையதாகவுமிருக்கும்.

இந் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இலங்கை மக்கள் இஸ்ரேலுடனுள்ள இராஜரீக மற்றும் சகல தொடர்புகளையும் துண்டிக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டுமென கோருகிறது.

## உலக வலம்

உஸ்மான்

# கருணாநிதியின் முட்டாள் கனவு

## கிள்ளி எறிய கம்யூனிஸ்டுகள் வெற்றிலைக் காம்பல்ல

## கம்யூனிஸ்டுகளை அடக்குவதில் காங்கிரசையும் மிஞ்சுகிறது தி.மு.க. ஆட்சி

## சுகார்த்தோ பாசிஸ்டு கும்பலின் ஆட்சிக்கு இந்தோனேஷிய மக்களின் எதிர்ப்பு கூடுகிறது

## மற்றொரு கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கும்பலுடன் ரஷிய திரிபுவாதிகள் பேச்சுவார்த்தை

இந்தியாவில் இப்பொழுது வேகமாகப் பரவி வரும் விவசாயிகள் போராட்டத்தின் பின்னணியில் புரட்சிகர புத்திஜீவிகளின் விழிப்புக்கும் எழுச்சிக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளின் பிரசுரங்களைப் பற்றி சென்ற வாரம் இப் பத்தியில் எழுதியிருந்தேன். தற்சமயம் இந்தியாவின் ஏழு மாநிலங்களிலே புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையில் மக்கள் இயக்கம் நடைபெற்று வருவது பலரும் அறிந்ததே. ''கேரளத்திலும், ஆந்திராவிலும் நக்ஸல்பாரிகளின் கை ஓங்கி வருவதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்'' என்று அண்மையில் அழுது தீர்த்திருக்கிறது ஆனந்த விகடன்.

அஸ்ஸாம், ஆந்திரா, பஞ்சாப், பூஹார், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், கேரளம் ஆகியன மேற்குறிப்பிட்ட ஏழு மாநிலங்கள். இவற்றுடன் சமானமாக தமிழ் நாட்டையும் கூற முடியாவிட்டாலும் புரட்சிகர கம்யூனிஸ்டுகள் தீவிரமாகப் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் மாசேதுங் சிந்தனைகள் மும்முரமாக பலரால் கற்கப்பட்டு வருகின்றன; பல இடங்களில் சுவரொட்டிகளும், மாஓ படங்களும் தீட்டப்பெறுகின்றன. இவ் ஆரம்பத்தைக் கண்டு கோபாவேசம் கொண்டுள்ளாராம் முதலமைச்சர் முத்துவேலர் கருணாநிதியார். சில தினங்களுக்கு முன், மாஓ படங்களுடன் சிலர் கைது செய்யப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவந்ததையடுத்து சென்னை சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுக்குப் பதில் அளித்த கருணாநிதி, நக்ஸல் பாரிகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும்'' என்று முழக்கம் செய்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகள் வெற்றிலைக் காம்பு அல்ல, கிள்ளி எறிவதற்கு என்பதை ஏகநாதர் திரைப்பட வசன கர்த்தா ''கலைஞர்'' கருணாநிதி உணராமலிருப்பது அவரின் அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது. 1917ம் வருடம் மகத்தான ஒக்டோபர் புரட்சி நடந்தேறியதைத் தொடர்ந்து இன்றுவரை கம்யூனிஸத்தை ஒழிக்க முற்பட்ட ''கலைஞர்களும்,'' முதலமைச்சர்களும், முடிமன்னர்களும் கணக்கற்றோர். ஏகாதிபத்தியம் இரவு பகல் என்று பாராமல் எதிர்ப் புரட்சித் திட்டங்களை வகுத்து நடத்திக்கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் நாளுக்கு நாள் ஏகாதிபத்தியமே வலுவிழக்கிறது அன்றி கம்யூனிஸமல்ல.

கம்யூனிஸ்டுகளை வேரோடு அழிக்க விரும்பும் கருணாநிதி மற்றெல்லா பூர்ஷுவா அரசியல்வாதிகளைப் போலவே நடந்துகொள்கிறார். அண்ணாதுரையின் அரசியல் பாத்திரம் பற்றி சில காலத்துக்கு முன் தொழிலாளியில் தோழர் ஒருவர் எழுதிய கட்டுரைகள் வாசகருக்கு நினைவிருக்கலாம். அண்ணாவுக்கு வாய்த்த தம்பியும் உண்மையில் அசல் ஏகாதிபத்திய தாசன் தான். அது மட்டுமல்ல, அண்ணாதுரையைப் போல கருணாநிதியும், ராமமூர்த்திகளையும், பாலதண்டாயுதங்களையுமே அளவுகோலாகக் கொண்டுள்ளனர். ஆனால் இப்போது, மார்க்சிஸம்— லெனினிஸம்— மாசேதுங் சிந்தனையின் ஒளியில் உருவாகிவரும் புரட்சிகர கம்யூனிஸ்டுகள், கருணாநிதி நினைப்பது போலவும், திரைப்படத்தில் எம். ஜி. ஆர். செய்வது போலவும் ஒருசில அசகாய சூரர்களுக்கு அடங்குபவர்கள் அல்ல. சென்ற வாரம் நாம் குறிப்பிட்ட துண்டுப் பிரசுரத்திலே, தமிழ்நாட்டுப் புரட்சிகர மாணவர்கள் மாஓ வாசகம் ஒன்றை எதிரொலித்துக் கூறியிருப்பதுபோல, ''வரலாற்றை நிர்ணயிப்பது தனி மனிதர்கள் அல்ல; மக்களே!''

கம்யூனிஸ்டுகளை அடக்குவதில் காங்கிரஸ் ஆட்சியையே மிஞ்சும் வகையில் நடந்துகொள்கிறார் கருணாநிதி. ராஜாஜியின் புதிய சீடன் அல்லவா? நூற்று இருபது (120) என்ற குற்றப்பிரிவு சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் கம்யூனிஸ வேட்டை நடைபெறுகிறது என்பது பலருக்கு தெரியாமலிருக்கலாம். ஆனால் தற்சமயம் சுமார் நூறு புரட்சிகர கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் முக்கியமானவர்கள் ஒருவராவது இதுவரை அகப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதே.

''கம்யூனிஸ்டுகள் மீன்கள்; மக்கள் நீர்'' என்ற மாஓ மணிமொழிக்கு இணங்க, அவர்கள் மக்கள் மத்தியில் உள்ளனர். ஆகவே புரட்சிகர கம்யூனிஸ்டுகளை ஒழிப்பது என்பது, முத்துவேலர் கருணாநிதி முக்கி முயன்றாலும் முடியாத காரியம். தவிர்க்க முடியாத நியதியாக உலகம் முழுவதிலுமே புரட்சிப் புயல் வீசும்போது தமிழகத்தில் மாத்திரம் (தி. மு. க. ஆள்வதால்) தென்றல் தவழப்போகிறது என கருணாநிதி கனவு காண்பது முட்டாள்தனம். சமீபத்தில் இராமநாதபுரத்திலே பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் மாஓ சிந்தனைகள் பற்றி தேர்வுக்கு கேள்வி அமைத்ததை பாரதூரமாக கவனித்துள்ளது கருணாநிதி ஆட்சி. கம்யூனிஸ எதிர்ப்பு என்ற பாறாங்கல்லை தூக்கி தனது காலிலேயே போட்டுக் கொள்ளப் போகிறார் கருணாநிதி.

★

கடந்த சில நாட்களாக இந்தோனேஷியாவைப் பற்றிய செய்திகள் பூர்ஷுவா பத்திரிகைகளில் நிறைய இடம் பெற்றன. மக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெயின் விலை உயர்வை ஆட்சேபித்து, மாணவர் நாடெங்கிலும் ஆட்சேபனை கூட்டங்கள் நடத்தியிருக்கின்றனர். ''சுகார்த்தோ நிர்வாகத்தில் பொருளாதாரம் சீரடைந்து வருகிறது'' என்ற ஏகாதிபத்திய பிரச்சாரத்தை இந் நிகழ்ச்சிகள் வன்மையாகப் பொய்ப்பித்துள்ளன

மிருகத்தனமான அடக்குமுறை மக்களுக்கு எதிராக சுகார்த்தோ பாசிஸ்டுக்கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட போதும் மக்களது ஆயுதம் தாங்கிய போராட்டம் வலுத்து வரும் செய்தியை பூர்ஷுவா ஏடுகள் மறைத்து வந்துள்ளன; ஆங்காங்கு சில்லறை குழப்பங்களாகவும், பயங்கரவாதிகள் செயல்களாகவும் அதனைத் திரித்து விவரிக்கின்றனர். எனினும், சமீபத்தில் சிற்சில ஐரோப்பிய, ஆஸ்திரேலிய பத்திரிகைகள் ஓரளவு வெளிப்படையாகவே நிலைமையை வர்ணித்துள்ளன. அவற்றின் சிலவற்றை இங்கு தருகிறேன்:

''சுகார்த்தோ ஆட்சியிலே பொருளாதாரச் சிக்கல்கள் பெருகி வருகின்றன, மத்திய ஆட்சி தாங்கமாட்டாத அளவுக்கு நிர்வாகசேவை பல்கிப் பெருகியுள்ளது; இராணுவம் ஏறத்தாழ முந்நூற்றி எழுபதுனாயிரம் (370,000) பேருக்கு உயர்ந்துள்ளது. தலைநகரே இராணுவ முகாமாகவே தான் காட்சியளிக்கின்றது. 1973ம் ஆண்டில் இந்தோனேஷியாவிலே வேலையற்றோர் தொகை ஐம்பது இலட்சமாகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.''

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செய்ய முனைந்துள்ள சுகார்த்தோ பாசிஸ்டுக் கும்பலுக்கு எதிராக பலவிதமான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. மிக அண்மையில் வெளிவந்த செய்திகளின்படி, இந்தோனேஷிய விமானப் படையைச் சேர்ந்த ஆயிரம் பேர் (அதிகாரிகள் உட்பட) கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஒரு தீவிலே காலாட் படையைச் சேர்ந்த நூறு வீரர்கள் கைது செய்யப்பட்டனர். கடற்படையிலும் இதே நிலைமைதான்.

இந் நிகழ்ச்சிகள் (சோவியத் திரிபுவாதிகள் என்ன தான் கூறியபோதும்) இந்தோனேஷிய ஆளும் கும்பலின் பலவீனத்தையும், அது எதிர்நோக்கும் மக்கள் எதிர்ப்பையும் பிரதிபலிக்கின்றன. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஏகாதிபத்திய வட்டாரத்தைச் சேர்ந்த நாடுகள் சுகார்த்தோ கும்பலுக்கு, மேலும் ஆயுதங்களை விற்க விரும்புகின்றன. (ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் இத்துறையில் கொழுத்த வியாபாரம் செய்வது யாவரும் நன்கறிந்ததே) சமீபத்தில் அவுஸ்திரேலிய இராணுவ அமைச்சர் பீகொக், இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்து யுத்த தளவாடங்கள் விற்பது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலையிலேயே இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, இந்தோனேஷிய விடுதலைக்கும் தேச புனருத்தாரணத்துக்கும் ஆயுதந்தாங்கிய மக்கள் யுத்தமே ஒரேயொரு பாதை என அறுதியிட்டுக் கூறியுள்ளது.

★

சென்ற வாரம் இப்பத்தியிலே மேற்கு ஜெர்மன் ஆளும் வர்க்கத்துடன், ரஷிய சமூக ஏகாதிபத்தியம் நடத்திவரும் வெட்கங்கெட்ட விபசாரப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி எழுதியிருந்தேன். இப்பொழுது இன்னுமொரு ''பேச்சுவார்த்தை'' பற்றிய செய்தி தெரிய வந்துள்ளது.

அதி தீவிர கம்யூனிஸ்டு எதிர்ப்புக் கொள்கையுடைய ஸ்பானிய பாசிஸ்டு கும்பல் திடீரென சோவியத் திரிபுவாதக் கும்பலோடு அளவளாவத் தொடங்கியிருக்கிறது. ஸ்பானிய வெளிநாட்டமைச்சன் பிருவோ, சோவியத் தலைநகரில் ''உயர்தர'' ரஷ்ய உத்தியோகத்தர்களுடன் நீண்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளான். ஸ்பானிய பத்திரிகையான பியூப்ளோ இத்தகவலை பிரசுரித்துள்ளது. ஜனவரி மாதம் 12ந் திகதி யுனைட்டட் பிரஸ் என்ற அமெரிக்க செய்தி ஸ்தாபனம் இச் செய்தியை ஊர்ஜிதப்படுத்தி வெளியிட்டது.

ஸ்பானிய அரசாங்க பிரமுகர் ஒருவர் கூற்றுப்படி, இப்பேச்சுவார்த்தைகள், பிருவோ என்பவன் பிலிப்பைன்சிலிருந்து, பிராங்பெர்ட்டுக்கு போகும் வழியில் மொஸ்கோவில் தங்கியிருந்த போது நடத்தப்பெற்றனவாம். மிகச் சமீபகாலத்தில் ரஷ்ய சமூக ஏகாதி

— 8-ம் பக்கம் பார்க்க

## நம்மைச் சுற்றி ——————> நவம்

# தமிழரசும், தமிழ் காங்கிரஸும் பேய்க் காட்டுகின்றன

யு. என். பி. பதவிக்கு வந்ததும் அதன் வர்க்க நண்பர்களான தமிழ் காங்கிரஸும், தமிழரசு கட்சியும் அமைச்சர்களை வடக்கே வரவேற்பதில் போட்டிபோட்டுக் கொண்டு முன்வந்தன. ஒவ்வொரு யு. என். பி. அமைச்சருக்கும் இவ்விரு கட்சியினரும் அளித்த ஆடம்பரமான வரவேற்பும், உபசாரமும் இவர்களுக்கும் யு. என். பீ.க்கும் உள்ள நட்பையும் உறவையும் நன்கு பகிரங்கப்படுத்தின. அவர்கள், குறிப்பாக தமிழரசார் இலங்கையில் இருந்துவரும் அந்நிய ஏகாதிபத்தியத்தை மறந்து விட்டு— இல்லை மறைத்துவிட்டு, இல்லாத ''சிங்கள ஏகாதிபத்தியம்'' என்று தாங்கள் எடுத்து வந்த வாந்தியை திரும்பவும் விழுங்கிவிட்டனர். அவர்கள் இதுகாலவரை கூறிவந்த தமிழர் பிரச்சினைகளெல்லாம் மூட்டை கட்டி வைக்கப்பட்டன. யு. என். பி. தமிழர் பிரச்சினைகளில் ஏதேனும் ஒன்றையாவது தீர்க்காதது மட்டுமல்ல, கூப்பனரிசியை பாதியாக வெட்டியது, ரூபாயின் மதிப்பை மூன்று தடவை குறைத்தது, விலைவாசியை வீங்கவைத்து வாழ்க்கைச் செலவை தாங்கமுடியாதளவு அதிகரித்தது, வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பட்டதாரிகளிடையே வேலையின்மையையும் வளர்த்தது, உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவை ஓரளவாவது சரிக்கட்ட சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், ஊழியர்கள்மீது அடக்குமுறையை பாவிப்பது போன்ற இன்னோரன்ன தமிழ் மக்களையும் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்த போதெல்லாம் இவ்விரு கட்சியினரும் ஒருவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அதற்கு ஆதரவாக இருந்ததோடு மக்கள் விரோத யு. என். பி. க்கு மிக நெருக்கம் யார் என்பதைக் காட்டிக்கொள்வதில் தான் ரொம்பவும் கவனம் எடுத்தனர். வர்க்க பாசம் சும்மா இருக்க விடுமா?

இவர்களின் ஆதரவாலும் வரவேற்பாலும் 1965ல் தொடங்கப்பட்ட யு. என். பி. அமைச்சர்களின் வடக்கு விஜயம் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் கைத்தொழில் அமைச்சர் பிலிப் குணவர்தனவுக்கும், அவருடைய விஜயம் சூடாறுவதற்கு முன்பே கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்ற உள்ளூராட்சி அமைச்சர் பிரேமதாசாவுக்கும் இவ்விரு பந்தங் கட்சியினரும் பெரும் தடல்புடல் வரவேற்புகளை அளித்ததோடு, யு. என். பி. தான் திரும்பவும் வரவேண்டும் என்ற தமது விருப்பத்தை அவர்களின் உரைகளிலே சிறிது பச்சையாகவே தெரிவித்தனர். பிரேமதாசாவும் தாங்கள் திரும்பவும் நிச்சயம் பதவிக்கு வருவோம் என்று அவர்களுக்கு நம்பிக்கை அளித்தார்.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், யு. என். பி. யுடனுள்ள உறவை துண்டித்துக்கொண்டோம் என்று சொல்லி அமைச்சரவையிலிருந்து விலகிக்கொண்ட தமிழரசுக் கட்சி, அதேவேளையில், அமைச்சர்களை வாவேற்பதில் பொன்னம்பலம் கட்சியாருடன் போட்டி போடுவதிலிருந்து தமிழ் மக்களை எவ்வளவு தூரம் பேய்க்காட்டுகிறார்கள் என்பதுதான். தமிழர்கள் ஏமாளிகள், முட்டாள்கள் என்பது இவர்கள் கணிப்பு. ஆனால்

சாவகச்சேரியில் இப்படி கொட்டமடித்திருக்கிறார் என்றுகண்ட தமிழரசார் தமது வாலிபர் மாநாட்டை சாவகச்சேரியில் அதிவிமரிசையாக நடத்தத் தீர்மானித்துள்ளனராம்.

இந்த இரு கட்சியினரும் தமக்குள் சிண்டு பிடித்துக் கொண்டாலும் அடிப்படையில் இரு கட்சியினரும் சுரண்டும் முதலாளித்துவ, பிற்போக்கு வர்க்கத்தின் பிரதிநிதிகள்தாம்; அந்நிய ஏகாதிபத்தி

பேர்ஸி தமது பாராளுமன்ற அங்கத்தவராயிருந்தாலும் அவர் கட்சியின் அங்கத்தவராய் இருந்தவரல்ல என்று விநோதமான விளக்கமும் தந்திருக்கிறது. கட்சியின் அங்கத்தவராய் இல்லாத ஒருவர் எப்படி அவர்களது கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவராய் இருந்தார் என்பதை கெனமன் கும்பல் விளக்கவில்லை. இது ஒருபுறமிருக்க, பேர்ஸி ஏன் கெனமன் திரிபுவாதிகளிடமிருந்து யு. என். பி.க்கு தாவ வேண்டும்? யு. என். பி. க்கும் திரிபுவாத கட்சிக்குமிடையே அவர் வித்தியாசம் காண முடியாததாயும் இருக்கலாம். யு. என். பி. ஏகாதிபத்தியத்திற்கு

முனைந்தது யு. என். பி. இப்படி ஒரு எக்கச்சக்க நிலையை உண்டுபண்ணி விட்டு, தாங்கள் நல்ல பெயரைத் தட்டிக்கொண்டு போகவே யு. என். பி. யினர் இப்படி ஒரு தந்திரத்தை கையாண்டனர் என சிலர் கருத்துத் தெரிவித்தனர். இதனை உண்மை என்று கொள்ளலாம். தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் புதிய காருடன் அவர்கள் மத்தியில் போவது புத்திசாலித்தனமல்ல என நினைத்து கார் வழங்கும் முடிவை எதிர்த்திருக்கலாம். ஆனால் அத்தியாவசியப் பொருட்களை தருவிக்கவே அந்நியச் செலாவணி இல்லாமல் தவிக்கும்போது இப்படி எம். பி. மார்களுக்கும், புதிய அபேட்சகர்களுக்கும் கார் தருவிக்க அனுமதி வழங்கி அதில் அவர்கள் உல்

## மக்களை ஏமாற்றும் மாநாடுகள்

யத்திற்கு பக்தி செலுத்துபவர்கள்தாம். பெயர் வித்தியாசமே தவிர இரு கட்சியினரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. ஆகையால் இவர்களால் நடத்தப்படும் மாநாடுகள் எல்லாம் தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்ற

தாசன், முதலாளித்துவ கட்சி. திரிபுவாதிகளைப் பொறுத்தவரை என்னவாம். அவர்களும் ஏகாதிபத்தியத்தின் புதிய நண்பர்களாகிவிட்டார்கள், முதலாளித்துவப் பாதையை எடுத்து விட்டார்கள். எனவே இவ்விரு கட்சிக்கும் வித்தியாசம் காணுத பேர்ஸி யு. என்.

லாச பவனிவர விரும்புவதைக் கண்ட மக்கள் இதற்கு தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். யு. என். பி. யினர் மக்களின் இந்த எதிர்ப்புக்கு அஞ்சி அந்த முடிவை ரத்துச் செய்தனர். இதுதான் உண்மை. ஆனால் புதிய

## திரிபுவாத எம்.பி. யு.என்.பி.க்கு பாய்ச்சல்

நெடுநாள் ஏமாறமாட்டோம். நாங்கள் முட்டாள்கள் அல்ல என்பதை தமிழ் மக்கள் இவ்விரு கட்சியினருக்கும் காட்டிடும் நாள் தூரத்தில் இல்லை.

இதே சமயத்தில் நெருங்கி வரும் தேர்தலுக்காக இவ்விரு

நடத்தப்படும் அரசியல் வித்தையே தவிர, தமிழ் மக்களுக்கு இவற்றினால் எதுவித நன்மையும் உண்டாகப் போவதில்லை.

தமிழ் காங்கிரஸ், இல்லாவிட்டால் தமிழரசு என்று

பி. க்கு கால் வருடச் சென்றதில் வியப்பில்லைதான். இதே நியாயப்படி பேர்ஸியை விலக்காமல் தொடர்ந்தும் தமது கூடாரத்திற்குள் கெனமன் கும்பல் வைத்திருக்கலாம். அவர்கள் அதனை விரும்பியும் இருக்

காருக்கு அவர்களுக்கும் உள்ளூர விருப்பம்தான்.

★

பாலஸ்தீன விடுதலை இயக்கமான அல்பதாஹ் இயக்கப் பிரதிநிதிகள் இலங்கைக்கு

## சி.ஐ.ஏ. உயர் அதிகாரியின் மர்ம விஜயம்

கட்சியினரும் நடத்திவரும் இன்னொரு விளையாட்டையும் குறிப்பிடத்தான் வேண்டும். அதாவது சில தினங்களுக்கு முன்பு பொன்னம்பலத்தார் தனது கட்சியின் மாநாட்டை சாவகச்சேரியில் நடத்தினர். ஆனால், அந்த மாநாட்டில் புதிதாக எதனையும் தமிழர்களுக்கு கூறிவிடவில்லை. அவராலேயே புதைகுழிக்குள் வைக்கப்பட்ட ''தமிழுக்கு சம அந்தஸ்து'' என்ற மொழிக் கொள்கையை திரும்பவும் தோண்டி எடுத்து மேடையில் வைத்தார். அடுத்த தேர்தலில் தமிழரசாரை விட அதிக ஸ்தானங்களைப் பெறவேண்டும் என்பதற்காகவே இப் பிரேதத்தை காட்சிக்கு வைத்தார்.

படாடோபமாக நடத்தப்பட்ட தமிழ் காங்கிரஸ் மாநாடு தமிழரசாருக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது. தமது நவரத்தினத்தின் தொகுதியைப் பறித்து, தனது கையாளரான குமாரசாமிக்கு கொடுக்கவே பொன்னம்பலம்

20 வருடங்களுக்கு மேலாக இருகரைப் பாய்ச்சல் நடத்தி தமிழ் மக்களும் அலுத்துவிட்டார்கள். அவர்களுக்கு இன்றைய தேவை புதிய தலைமை; புதிய பாதை. அந்த தலைமை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி; பாதை புரட்சிகரப் பாதையே.

★

சில நாட்களுக்கு முன்பு கெனமன் திரிபுவாதக் கும்பலின் பாராளுமன்ற அங்கத்தவரான பேர்ஸி விக்கிரமசிங்கா யு. என். பி. யில் தஞ்சம் புகப்போவதாக அடிபடும் செய்தியைப் பற்றிக் கூறியிருந்தேனல்லவா. அது உண்மையாகிக்கொண்டே வருகிறது. திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா யு. என். பி. க்கு ஆதரவாக உள்ளார் என்று காரணம் கூறி அவரை தனது கட்சியிலிருந்து விலக்கியுள்ளது கெனமன் திரிபுவாதக் கும்பல். மேலும் கெனமன் திரிபுவாதக் கும்பல்,

கலாம். ஆனால் ஊராரின் கண்ணில் மண்ணைத் தூவவேண்டுமே, அதனால்தான் பேர்ஸியை வெளியே தள்ளிவிட்டார்கள்.

★

புதிய கார் கிடைக்கும் என்று ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்த எம். பி. மார்களுக்கும், பொதுத் தேர்தலில் போட்டியிட இருக்கும் புதிய அபேட்சகர்களுக்கும், ''புதிய கார் இறக்குமதிக்கு அனுமதியில்லை'' என்ற மந்திரிசபையின் முடிவு பலத்த ஏமாற்றத்தை கொடுத்திருக்கும். எதிர்க் கட்சி எம். பீ. க்கள் புதிய காருக்கு துடித்தபோதிலும், யு. என். பி. அங்கத்தவர்கள் அதனை விரும்பாது எதிர்த்ததால் புதிய காருக்கு அனுமதி வழங்குவது என்ற முன்னைய முடிவு ரத்துச் செய்யப்பட்டதென பத்திரிகைகள் கூறின. இந்த விஷயத்தில் எதிர்க் கட்சியையும்விட நல்ல பெயரை தட்டிக் கொள்ள

வந்தபோது அவர்கள் சந்தித்த சகல கட்சியினரும் பாலஸ்தீனிய மக்களை தாங்கள் ஆதரிப்பதாகவே கூறிக்கொண்டனர். அமைச்சர் முகம்மது கூட பாலஸ்தீனிய மக்களின் விடுதலையை தனது அரசாங்கம் ஆதரிப்பதாக அல்பதாஹ் பிரதிநிதிகளிடத்தில் கூறினர். பாலஸ்தீனிய விடுதலை என்பது, இஸ்ரேலை இல்லாமலாக்கி பாலஸ்தீனத்தை மீண்டும் பாலஸ்தீனிய அரபு மக்களுக்கு உரியதாக்குவதாகும். இதனை நிறைவேற்ற ஆயுதப்போராட்டம் ஒன்றே வழி. இதனை நன்கு தெளிந்து தேர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடுகிறது அல்பதாஹ் இயக்கம். ஆனால் கெனமன் திரிபுவாத கும்பல் உட்பட சகல கட்சிகளும் யு. என். பி. அரசாங்கமும் இஸ்ரேலை அங்கீகரிக்கின்றன. ஆயுதப் போராட்டத்தை ஏற்க மறுக்கின்றன. இந்த நிலையில் தனது அரசாங்கம் பாலஸ்தீன விடுதலையை ஆதரிப்பதாக

8-ம் பக்கம் பார்க்க

# தொழிற்சங்கச் செய்திகள்

சென் பிரிஜட் கன்னியர் மட கீழ் மட்ட ஊழியர்கள் தமது சம்பளவுயர்வு கோரிக்கையில் வெற்றி பெற்றுள்ளனர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள இலங்கை சாதாரண மற்றும் தொழிலாளர் சங்கம் இத் தொழிலாளர்களுக்காக சம்பள உயர்வு கோரிக்கையை முன் வைத்துப் போராடியது.

இக் கோரிக்கை சம்பந்தமாக தொழில் அதிகாரியின் முன்னிலையில் சங்கத்திற்கும், நிர்வாகிகளுக்கும் நடந்த பேச்சுவார்த்தையின் பலனாக கீழ்க்காணும் சம்பள உயர்வு கிட்டியுள்ளது.

சகல ஊழியர்களுக்கும் மாதம் 30-00 ரூபா சம்பள உயர்வு அளிக்கப்படும். மாதத்திற்கு ரூ. 150/-க்கும் குறைவாக சம்பளம் பெறுபவர்களுக்கு வருடத்திற்கு ரூ. 3/- சம்பள உயர்வும், மாதத்திற்கு ரூ. 150/- க்கும் மேல் சம்பளம் பெறுபவர்களுக்கு வருடத்திற்கு ரூ. 2. 25 சதம் சம்பள உயர்வும் கிடைக்கும்.

★

## பதுளை

பதுளை மாவட்ட இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தைச் சேர்ந்த மடுல்சீமை பகுதி குடுதுவ தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 16ந் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

முக்கியமான ஐந்து கோரிக்கைகளையும் மற்றும் பல பிரச்சினைகளையும் முன் வைத்து உறுதியுடன் போராடுகிறார்கள் தொழிலாளர்கள். நியாயமான கோரிக்கைகளுக்காகவும், தோட்ட நிர்வாகத்திற்கு உதவும் பொலிஸின் அட்டகாசத்தை எதிர்த்தும் நடத்தும் இப்போராட்டம் மடுல்சீமைப் பகுதிகளிலுள்ள தோட்டத் தொழிலாளர்களிடையே புதிய விழிப்பை ஏற்படுத்தியுள்ளது.

★

## நமுனுகுல

இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் தலைமையில் நமுனுகுல பகுதி அழக மலைத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 17ந் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

நியாயமான எட்டு கோரிக்கைகளையும், மற்றும் பல பிரச்சினைகளையும் முன்வைத்து இவ் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுகிறது.

## மக்கள் சீனம் 80 டன் அரிசியை உதவியது

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அவதியுறும் மக்களுக்கு நிவாரண உதவியாக மக்கள் சீன குடியரசு 80 டன் அரிசியை இலவசமாக இலங்கைக்கு உதவியுள்ளது.

## நம்மைச் சுற்றி......

### அமைச்சரும், கட்சிகளும்
# கூறும் படுபொய்

◎ 7-ம் பக்கத் தொடர்

அமைச்சர் முகம்மது கூறுவதும், தாமும் ஆதரிப்பதாக இதர கட்சிகள் கூறுவதும் படுபொய்யல்லவா? இஸ்ரேலை ஒழித்துக் கட்டாமல் பாலஸ்தீன் விடுதலை இல்லை. ஏகாதிபத்திய சிருஷ்டியான இஸ்ரேலை ஒழித்துக் கட்ட ஏகாதிபத்திய தாசனான யு. என். பி. அரசாங்கமும், அதன் அமைச்சர் முகம்மதுவும் ஆதரவு காட்டுவார்கள் என்று நம்புவது முட்டாள்தனம். அல்பதாஹ் பிரதிநிதிகளுக்கு யு. என். பி. முஸ்லிம் ''தலைவர்களும்'' எதிர்க்கட்சி முஸ்லிம் ''தலைவர்''களும் வரவேற்பு அளித்தது அந்தரங்க சுத்தியாக பாலஸ்தீன் விடுதலையை ஆதரித்ததல்ல; விரைந்து வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம்களின் வோட்டுக்களை ஏமாற்றிப் பறிப்பதற்காகத்தான். உண்மையில் எவ்வித ஊசலாட்டமும், வோட்டு ஆசையும் இல்லாமல் பாலஸ்தீன் விடுதலையையும், அதற்காகப் போராடும் அல்பதாஹ் இயக்கத்தையும் ஆதரிப்பது, தோழர் சண் அல்பதாஹ் பிரதிநிதிகளுக்கு கூறியது போன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே.

★

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உள்வு ஸ்தாபனமான சி. ஐ. ஏ.யின் முக்கிய உயர் அதிகாரிகளில் ஒருவன் சமீபத்தில் இலங்கைக்கு மர்ம விஜயம் செய்து, யு. என். பி. அரசாங்கத்தின் முக்கிய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியை சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளான்.

இப் பேச்சுவார்த்தை பரம இரகசியமாக இருந்த போதிலும், இந் நாட்டில் வளர்ந்து வரும் புரட்சிகர மக்கள் இயக்கங்களை அடக்கவும், நசுக்கவும், சீர்குலைவு சதிவேலைகளைக் கையாளவும் திட்டமிடுவதற்காகவே நடத்தப்பட்டுள்ளது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நலனைப்பாதுகாக்கவும், கொள்ளைச் சுரண்டலை தொடர்ந்து நடத்தவும் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சதிகள் மூலம் அரசாங்கங்களைக் கவிழ்ப்பதும், படுகொலைகள் செய்வதும் சகஜ நிகழ்ச்சியாகி விட்டது. மேலும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொம்மை அரசாங்கங்களை எதிர்த்து தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் நடைபெறும் வெகுஜன போராட்டங்களையும், புரட்சிகர எழுச்சிகளையும், மக்கள் யுத்தங்களையும் ஈவிரக்கமின்றி நசுக்குவதற்காக சிலந்தி வலைப் பின்னலாக உலகில் சி. ஐ. ஏ. இயங்குகிறது. அத்தகைய கொலைகார ஏகாதிபத்திய சி. ஐ. ஏ.யின் உயர் அதிகாரி இலங்கை வந்து ஏகாதிபத்திய சார்பு யு. என். பி. அரசாங்கத்தின் நிரந்தரக் காரியதரிசியோடு இரகசிய பேச்சுவார்த்தை நடத்துவது இலங்கையிலும் சி. ஐ. ஏ.யின் திருவிளையாடல்களைக் கட்டவிழ்த்து விடவே.

## உலகவலம்

◎ 6-ம் பக்கத் தொடர்

பத்தியவாதிகள் திட்டமிட்டுச் செய்வது போல கடுமையான கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆட்சிகளுடன் தான் புதிய உறவுகளுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார்கள் போலத் தெரிகிறது.

★

மலாய்ச் செய்திகளை கடந்த சில வாரங்களாக இப்பத்தியில் குறிப்பிட்டு வந்துள்ளேன். நாம் கூறி வந்தபடியே அங்கு நிகழ்ச்சிகள் நடந்துவருகின்றன. சென்ற வாரம் மலாயாவை முற்று முழுதான பாசிஸ்டு ஆட்சியில் செலுத்திய நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

# மலாயாவில் பாராளுமன்றம் இல்லை

சென்ற வருடம் மே மாதத்தில் உதவிப் பிரதமர் ரஸாக் கோஷ்டி திட்டமிட்டு நடத்திய ''இன'' கலவரங்களைத் தொடர்ந்து, அந் நாட்டு பாராளுமன்றம் ''தற்காலிகமாக'' ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது நிரந்தரமாக ''ஒத்திவைக்கப்பட்டுள்ளது.'' பதிலாக, தேசிய ஆலோசனைச் சபை என்ற புதிய நிறுவனம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகள் ஆறும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இது ஒன்றே பாராளுமன்றத்தின் உண்மை தத்துவத்தை மக்களுக்கு உணர்த்திவிடும்.

இச் சபை தனது அலுவல்களை இரகசியமாக நடத்துமாம்.

பூர்ஷுவா சர்வாதிகாரத்தில் பாராளுமன்றம் இருப்பதும் இல்லாதநும் ஒன்றுதான். அடக்குமுறை ஒன்றுதான். ஆகவேதான் பாராளுமன்ற வாதத்தையே தூக்கி எறிந்துவிட்டு புதிய மக்கள் ஆட்சி நிறுவனங்களை மக்கள் நிறுவுதல் வேண்டுமென்று மார்க்சிஸம்- லெனினிஸம் - மாசேதுங் சிந்தனை கூறுகிறது.

இத்தகைய சூழ்நிலையிலேயே மலாயாவில் மக்களின் ஆயுத மேந்திய போராட்டம் வலுப் பெற்று வருவதாக செய்திகள் கூறுகின்றன. எமது சகோதரப் பத்திரிகையான அவுஸ்திரேலிய வான் கார்ட் இது பற்றி சமீபத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது:

''ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகவும் அவர்களது கைப்பொம்மைகளுக்கு எதிராகவும் மக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது என்பதை மலாயாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. மலாயா மக்கள் விடுதலைச் சேனை நாளுக்கு நாள் போராட்டத்தில் பலம் பெற்று வருகிறது; புதிய புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

''சமீபத்தில் அமெரிக்க உப ஜனதிபதியும் ஏகாதிபத்திய வெறி நாயுமான அக்னியூ, தனது ஆசிய சுற்றுப்பயணத்தின் போது, அவுஸ்திரேலியா மலாயாவுக்கு மேலதிகமான தடைகளை அனுப்புவது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.''

அக்னியூ போன்ற யுத்த வெறியர்களின் - ஏகாதிபத்தியவாதிகளின் - ஆலோசனையின் பேரில், ரஹ்மான் - ரஸாக் லீகுவான் யூ கும்பல் நாட்டின் படைபலத்தைக் கூட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ''ஆசிய மக்களைக் கொண்டே ஆசிய மக்களைப் போரிடுதல் என்ற ஏகாதிபத்திய கொள்கைப்படி, மலாயா மக்களை மலாயாப் படைகளைக் கொண்டே அடக்குவதுதான், இம் முயற்சியாகும். ஜனவரி 15ந் திகதி, ''மலேஷியா'' வரவு செலவு திட்டம் பற்றி பேசிய பாசிஸ்டுத் தலைவன் ரஸாக், பொலிஸ் இராணுவப் படைகளை வேகமாக விஸ்தரிக்க வேண்டும் என்று பிதற்றினன். ரஸாக் அறிவித்த வரவு - செலவு திட்டத்தில் ''பாதுகாப்பு'', ''உள் நாட்டுக் காவல்'' ஆகியவற்றுக்கு 80 கோடிக்கும் அதிகமான மலாயா டொலர்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. இது கடந்த வருடத்தில் இதே துறைச் செலவினத்திலும் பார்க்க 25 சத வீதம் அதிகமாகும்.

இத் திட்டம் குறித்து, மலாயாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகன் றிட்மன் மிகுந்த திருப்தி தெரிவித்துள்ளான். ''எங்கு அடக்குமுறை உண்டோ, அங்கு எதிர்ப்பும் உண்டு'' என்றார் தலைவர் மாஓ. அதற்கு சான்றாகி வருகிறது மலாயா.


படித்து விட்டீர்களா?

**மகத்தான மாசேதுங் சிந்தனை**

எழுதியவர்:
**தோழர் என். சண்முகதாசன்**
(பொதுச் செயலாளர்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

விலை: 50 சதம்

கிடைக்குமிடம்:
தொழிலாளி பிரசுராலயம்,
121, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.



உழைக்கும் மக்களின் உரிமைக் குரல்!

பாட்டாளி மக்களின் புரட்சிக் குரல்

**தொழிலாளி**

வாரப் பத்திரிகை

புதிய சந்தா

1 வருடம் 7-50
6 மாதம் 3-75
3 மாதம் 2-00


பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2